8th November 1965]

(b) if so, the stage at which the matter now stands?

THE HON. SRI P. KAKKAN : (a) The Government of India propose to start a cattle farm in Madras State at a cost of Rs. 50 lakhs for development of Tharparkar breed of Dairy Cattle.

(b) The State Government are now in search of a suitable place for location of the farm.

(அ) இம்மாநிலத்தில் தர்பாரிகர் இனக் கறவை மாடுகளை வளர்ப்பதற்காக ரூ. 50 லட்சம் செலவில் மாட்டுப் பண்ணை ஒன்றை ஆரம்பிக்க இந்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

(இ) இப்பண்ணையை ஏற்படுத்துவதற்குத் தகுந்த இடத்தை இவ்வரசாங்கம் இப்போது தேடி வருகிறது.

திரு. எஸ். கே. சம்பந்தன் : மத்திய அரசாங்கம் இந்த ஆலோசனையை எப்போது தெரிவித்தது? பதில் அனுப்புவதில் இவ்வளவு நாள் காலதாமதம் ஆவதற்கு இந்த அரசாங்கம் பொறுப்பா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பி. கக்கன் : *காலதாமதம் ஒன்றும் இல்லை. எவ்வளவு சீக்கிரமாக அனுப்ப முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகத் தான் நாம் அனுப்பியிருக்கிறோம்.*

Development of sugarcane

* 139 *Q.*—SRI S. K. SAMBANDHAN : Will the Hon. the Minister for Home be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 87 on 3rd March 1965—

(a) the amount of cess collected from the South Arcot district during the financial years 1962–63 and 1963–64; and

(b) the amount spent in the district for the development of sugarcane during these years?

THE HON. SRI P. KAKKAN : (a) Rs. 29·74 lakhs.

(b) It is not possible to assess the expenditure incurred on development of sugarcane for the South Arcot district alone, as the schemes are implemented on a statewise basis.

(அ) ரூ. 29.74 லட்சம்.

(இ) கரும்பு வளர்ச்சித் திட்டங்கள் மொத்தமாக மாநில முழுவதற்கும் நிறைவேற்றப்படுவதால், தென் ஆற்காடு மாவட்டத்திற்காக மட்டும் கரும்பு வளர்ச்சிக்காக எவ்வளவு செலவிடப் பட்டது என்று கணக்கிட இயலாது.

திரு. எஸ். கே. சம்பந்தன் : *இந்த செஸ் தொகை கரும்பு அபிவிருத்திக்காக செலவழிக்கப்படுகிறது என்றாலும் எந்த மாவட்டத்தில் அந்தத் தொகை வசூலிக்கப்படுகிறதோ அந்த மாவட்டத்திலேயே அந்தத் தொகையை செலவழிக்க வேண்டிய அவசியமிருக்கிறது. அப்படி அதிகமாக வருமானம் வரும்*

மாவட்டத்தில் செலவழிக்கப்பட்ட தொகை இதுவரையில் மிகக் குறைவாக இருப்பதால், அரசாங்கம் அதிகமான தொகை வசூலாகும் அந்தந்த மாவட்டத்திலேயே அவற்றை செலவழிக்க ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. பி. கக்கன் : எவ்வாறு செலவிடவேண்டுமென்று கணக்கு இருக்கிறது. கோரிக்கைகள் வருகின்ற இடங்களைப் பார்த்து பரிசீலனை செய்து போதுமான அளவு செய்துகொண்டு தான் இருக்கிறோம்.

திரு. எஸ். கே. சம்பந்தன் : இந்தப் பணத்திலிருந்து செலவழிக்கக் கோரி ரோடு வசதி போன்றவைகளுக்காக விவசாயிகளிடமிருந்து அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கும் கோரிக்கைகளின் மேல் இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இனிமேலாவது அமைச்சர் அவர்கள் அவற்றைப் பரிசீலனை செய்வார்களா ?

கனம் திரு. பி. கக்கன் : அப்படி செலவழித்திருக்கிற பட்டியலை படிப்பது என்றால் நேரம் அதிகமாகும். பெரும் பகுதி தென்னாற்காடு ஜில்லாவில் நெல்லிக்குப்பம் பகுதியில் செலவழிக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Depressed Classes Federation

*140 Q.—SRI M. SANKARALINGAM PILLAI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Depressed Classes Federation has intimated recently to the Government that unless their demands are met they intend observing the 15th August 1965 as a mourning day;

(b) if so, their demands; and

(c) the decision taken by the Government thereon?

THE HON. SRI P. KAKKAN: (a) It is not possible to answer this question in the absence of definite information from the Member as to what demands of the Federation he is referring to.

(b) & (c) Do not arise.

(அ) பெடரேஷனின் எந்த கோரிக்கைகளைப்பற்றி அங்கத்தினர் குறிப்பிடுகிறார் என்று தெளிவான தகவல் இல்லாததால் இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்க இயலவில்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

Co-operative Societies Loans

* 141 Q.—SRI SP. K. A. LAKSHMANAN CHETTIAR: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the Government are aware of the fact that in co-operative societies existing arrears of loans are being adjusted on due period by grant of fresh loans to the concerned societies;